Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 06-08 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 06-08 |
|---|---|

வேணு : 14 செப்டம்பர் 2008 கானம் : 2



பெங்களூர் குருபூர்ணிமா (ஜூலை 18) அன்று வியாஸ பூஜை

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

**Related Websites : www.madhuramurali.org / www.namadwaar.org**
**E-mail : contact@madhuramurali.org; publications @madhuramurali.org**

ஸ்ரீ ஹரி:
மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

NO FAME NO SELF INTEREST ONLY GOD NO NAME

# மதுரமுரளி

## தெய்வீக மாதப் பத்திரிகை



ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 14 செப்டம்பர் 2008 கானம் : 2

www.madhuramurali.org / www.namadwaar.org



ஆஷாட ஏகாதசி (ஜூலை 14)அன்று விட்டலாபுரத்தில் பூஜை



தூத்துக்குடியில் சத்ஸங்கம் (ஜூலை 22)



சிவகாசியில் சத்ஸங்கம் (ஜூலை 23)



பொன்னேரி ராமானுஜ சேரிடீஸ் சார்பில் நடந்த
நிகழ்ச்சியில் ஸ்ரீஸ்வாமிஜி (ஜூன் 30)

NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD

ஸ்ரீ ஹரி:

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே"

வேணு : 14 | செப்டம்பர் 2008 | கானம் : 2

## இந்த இதழில் ...

| | |
|---|---|
| ஸ்ரீமத் பாகவத தர்மஸாரம் | 02 |
| மதுரமான மஹனீயர் – 151 | 03 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு<br>ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள் | 06 |
| பாகவத பழம் | 08 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 12 |
| தியானம் | 14 |
| ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 21 |
| மாலே மணிவண்ணா – 65 | 27 |
| அக்ஷரமணமாலை – 149 | 29 |

- Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in 'Madhuramurali' is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writting from the publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.

# ஸ்ரீமத் பாகவத தர்மஸாரம்

—ஸ்ரீ ஸ்ரீ அண்ணா

நாலு வேதமங்கமான ராமகாதை பாரதம்
பத்துமெட்டுமாம் புராணமென்று சாத்திரம் பல
ஒதி ஒதி தீதிலாத மெய்யுணர்வு பெற்ற நாம்
வாஸு தேவன் நாமமின்றி வேறுஸாரம் கண்டிலோம்.

நாமரூபமற்றதேவன் நம்மவர்க்கருள்செய்ய
நாமரூபந்தாங்கிவந்து நல்லகாக்ஷி தந்தனன்
நாமரூபமில்லையென்று தேறுவர் மெய்ஞானியர்
நாமரூபமுள்ளதென்று நாடுவர் மெய்யன்பரே!

ஸாது ஸங்கம் சேர்ந்து தூயநற்கதைகள் கேட்டலும்
சோர்விலாது ராமநாமம் சொல்லி இன்பமெய்தலும்
போதுகொண்டு மாயன் பாதம் போற்றிப் பூசை செய்தலும்
வேதநூல் விதித்துச் சொல்லும் நல்ல பக்தி ஸாதனம்.

அப்பனாகி அம்மையாகி அண்ணனாகி நண்பனாய்
தெய்வமாகி நிற்குமந்த தேசிகன் தன் பொன்னடி
சென்னிமீது சூடிநல்ல சாத்திரங்கள் கற்றபின்
கைத்தலத்திற்காணவேண்டும் கற்றநூலினுட்பொருள்

காசுக்காகப் பாடியாடிக் காசுக்காகக் கண்கள்மூடி
காசுக்காக பூசை செய்து காசுக்காகப் பேசுவர்
ஈசன்நாமம் விற்கவந்த வேசதாரியாமவர்
மாசிலாத பக்திமார்க மேன்மையேது மறிந்திலர்

## மதுரமான மஹனீயர் – 151

(Dr. ஆ.பாக்யநாதன்)

உமா என்றொரு பக்தை, சிறுவயதிலிருந்தே உலகமே தெரியாமல் வாழ்ந்தவள். எப்பொழுதும் பகவானும், பகவானுடைய நாமாவும்தான் தெரியும்; காஞ்சி மஹாஸ்வாமிகளிடம் அப்படி ஒரு பக்தி; உலகத்தில் உள்ள எந்த ஒரு விஷயத்தையும் தன்னிடம் அண்டவிடமாட்டாள். அப்படி அண்டவிட்டால், அது கொஞ்சம் கொஞ்சமாக தன்னைப் பிடித்துக்கொண்டுவிடும் என்று நன்றாக தெரியும்;. தாமரை இலை தண்ணீர் என்று சொல்வார்களே அதற்கு சரியான எடுத்துக்காட்டு இந்த பக்தை; இந்த உலகத்தில்தான் அவள் இருக்கின்றாள். ஆனால், அவளுக்குள் உலகம் இல்லை. அவசியமான கடமைகளை நிறைவேற்றிவிட்டு, எப்பொழுதும் ராம நாமம் ஜபம் செய்து கொண்டே இருப்பாள். அப்படி ஜபம் செய்து வரும்பொழுது ஓரளவிற்கு நல்ல லயம் அவளுக்கு ஏற்படுவதுண்டு. அப்பொழுது இனம்புரியாத சுகத்தையும், அவளுடைய ஹ்ருதயத்தில் அனுபவிப்பாள்.

ஸத்ஸங்கம் என்று வந்தால் கூட, யாருடனும் அநாவசியமாக பேசி பழக மாட்டாள். அதற்காக யாரையும் வெறுக்கவும் மாட்டாள் அருமையான இந்த மனித பிறவியை வீண் அடித்து விடக்கூடாது என்ற ஒரே கவலைதான் அவளுக்கு எப்போதும் உண்டு.

எப்பொழுதும் குண்டு வெடித்து கொண்டிருக்கும் நாடுகளிலும், தீவிரவாதம் தலைதூக்கி இருக்கும் ஒரு நாட்டிலும் நாம் பிறந்திருந்தால் இப்படி நம்மால் அமைதியாக தியானம் செய்ய முடியுமா? மனித பிறவியை, அமைதியான தேசத்தில் கொடுத்தது பகவானுடைய அருள். இந்த பிறவியிலோ, எப்பொழுது வேண்டுமானாலும், மரணம் சம்பவிக்கலாம். விபத்து வரலாம். அதனால், வாழ்க்கையை ஒரு கணம் கூட வீணாக்ககூடாது.

உலகத்தில் வாழ்க்கை நடத்துவதற்காக சோன்பப்டியை ஒரு பாட்டிலில் நிரப்பி ஒருவர் தெரு தெருவாக பல கிலோ மீட்டர்கள் நடக்கின்றாரே ஏன்?. வயிற்றுக்காகத்தானே. அப்படி அவர் நடந்தாலும் என்ன பெரிய லாபம் வந்து விடப்போகின்றது?. நமக்கோ நம்முடைய உடலின் நன்மைக்காக டாக்டர் வாக்கிங் போக சொன்னால் கூட போக முடிவதில்லையே?. வெய்யிலில் தன்னுடைய குழந்தையை ரோடு ஓரத்தில் விளையாட விட்டு விட்டு கொதிக்கின்ற தாரை தலையில் சுமந்து ரோடு போடுகின்றாரே ஏன்?. வயிற்றுக்காகத்தானே! நல்ல வெயிலில் கையில் உளியை கொண்டு ஆண்கள் பெண்கள் எல்லோரும் கல் உடைக்கின்றார்களே ஏன்? வயிற்றுக்காகத்தானே! தலையில் சிமெண்ட், செங்கல் சுமந்து தூக்கிக்கொண்டு மாடி ஏறி ஏறி வேலைசெய்கின்றார்களே ஏன்? வயிற்றுக்காகத்தானே! நம்முடைய உடலின் அசுத்தத்தை பார்த்து நாமே அருவருப்பு அடையும் பொழுது கழிவுநீரில் ஒருவர் குதித்து சுத்தம் செய்கின்றாரே ஏன்? வயிற்றுக்காகத்தானே! பல மாடி கட்டிடங்களில் சுவரை வர்ணம் பூச ஒருவர் ஒரு கயிற்றைக் கட்டிக் கொண்டு தொங்குகின்றாரே ஏன்?. வயிற்றுக்காகத்தானே!

அப்படியிருக்க நாம் கிடைத்த மனித பிறவியை வீணாக்கலாமா? நேரத்தை வீணாக்குபவன் இறைவனுக்கு துரோகம் செய்கின்றான். வயதான பிறகு சரீரத்தைதான் உபாசனை செய்ய நேரம் சரியாக இருக்குமே தவிர பகவானை உபாசனை செய்ய முடியாது. இவற்றையெல்லாம் இந்த பக்தை சிந்தித்து கொண்டே ஒரு நாள் பஸ்ஸில் பயணம் செய்தாள். கண்டக்டர் வந்து "டிக்கெட்" என்று கேட்டார். இந்த சிந்தனையில் இருந்த உமாவோ, "ஆத்மாவிற்கு ஒரு டிக்கெட்" என்று தன்னை அறியாமல் கூறினாள். ஆனால் அவள் சொன்னது யாருக்கும் புரியவில்லை, சமீபகாலமாக அவளுக்கு, தனக்கு பிரேமபக்தி ஸித்திக்க வேண்டும் என்ற ஏக்கம் அதிகரித்து வந்தது. ஒரு நாள் தியானத்தில் மிகவும் அழகான தெய்வீகமான பெண்ணை பார்த்தாள். அந்த தெய்வம் "ராதை" என்று சொல்லவும் வேண்டுமோ?. உமாவை வாரி அணைத்து "ராதாதேவி" சிறிது நேரம் உமாவுடன் தட்டாம்பிள்ளையும் (கைகளை கோர்த்தபடி) விளையாடினாள். ராதையை நமஸ்காரம் செய்தவுடன் எனக்கு பிரேமபக்தி ஸித்திக்க வேண்டுமென்று ராதையிடம் அழ, பிரேமையே உருவான ராதையும், "உனக்கு பிரேமபக்தி ஸித்திக்கும்" என்று கூறினாள். அப்பொழுது ராதையை நன்றாக உற்று பார்த்தபொழுது, அவள் நம்முடைய மாதுரீஸகீதான் என்று தெரியவந்தது. அவளுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. இந்த சுகமான அனுபவத்தை ஸ்ரீஸ்வாமிஜியிடம் பகிர்ந்து கொண்டு, மாதுரீஸகீயின் கருணையை நினைத்து நினைத்து அழுது கொண்டே இருந்தாள்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி : ஸ்ரீமத் பாகவதத்தில் கஜேந்திரன் என்ற ஒரு யானை பகவானை துதி செய்து முக்தி அடைந்தது என்று நாம் சொல்லுகின்றோமே? இது ஒரு தத்துவத்தை உணர்த்த வந்த கதைதானே?

பதில் : பாகவதர்களான நாம் இதை தத்துவமாக பார்க்க முயல்வது ஒரு புறம் இருக்கட்டும். பரம வேதாந்தியும் ஞானியுமான பகவான் ரமண மஹரிஷிகளிடம், ஒரு சமயம் ஒரு பக்தர் ஒரு கேள்வி கேட்டார். "மனிதர்கள் மட்டும்தான் முக்தியடைய முடியுமா?. விலங்குகளும் முக்தியடைய முடியுமா?" என்பதே அது. அதற்கு பகவான் ரமணர், சட்டென்று என்ன பதில் சொன்னார் தெரியுமா? "ஏன் கஜேந்திரன் என்ற யானை அடைந்திருக்கின்றதே" என்றார்.

கேள்வி : மௌனம் சிறந்ததா?

பதில் : பகவத்விஷயமான பேச்சுக்கள் பேச்சுகள் ஆகாது. பகவானுடைய கீர்த்தனங்கள், நாமாக்கள் பேச்சாகாது. உலக விஷயங்களை தவிர்ப்பதுதான் மௌனம். வேதாந்தியும், பரம ஞானியுமான பகவான் ரமண மஹரிஷியே கூட ஆத்மானுபவம் அடைந்ததிலிருந்து வாய்திறந்து பேசாமலே இருந்திருந்தால், அவருடைய அனுபவமோ, அதன் வழிமுறைகளோ, அதனுடைய உயர்வோ

நமக்கு தெரிந்திருக்குமோ?. அதனால் எவ்வளவு அவசியமோ அவ்வளவு பேசினார். பக்தர்கள் பேசுவது பகவானை பற்றி அல்லவா! ஆகவே அதற்கு முடிவு ஏது?. அவர்கள் பேசிக் கொண்டே இருப்பார்கள்.

குருவின் அருளால் இறைவனை அறியலாம் என்பது பலருடைய அபிப்ராயம். ஆனால் என்னை கேட்டால், தெய்வத்தின் அருளால்தான் உண்மையான குருவை அடையாளம் தெரிந்து கொள்ள முடியும் என்றே நினைக்கின்றேன்.

–ஸ்ரீ ஸ்வாமிஜி


*Sri Hari :*

*Pranams to the Lotus feet of*

**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

**M/s. ZAAH Technologies India Private Limited**

*Web Designing and Application Development*

*KG Marina Bay, No. 75 & 77, Ground Floor,*

*Santhome High Road, Santhome, Chennai - 4.*

*E-mail : contact@buddiesinfotech.com*

***New Book From*** Karpagamputhakalayam

ஸ்ரீஸ்வாமிஜி பொதிகை தொலைக்காட்சியில் நமது வேதங்களில் உள்ள தத்துவங்களை சாரமாக எளிய தமிழில் பேசிய உரைகள் புத்தகமாக வந்துள்ளது.



**கற்பகம் புத்தகாலயம்**

4/2, Sundaram street, (Near Natesan park)
T.Nagar, Chennai-17
Email:info@karpagamputhakalayam.com
website:www.karpagamputhakalayam.com

**ஸ்ரீமத் பாகவதம்** (2)
– ஸ்ரீஸ்வாமிஜி

வேதவ்யாஸரின் பெருமைகளை பார்த்தோம். அதுபோல் பக்தி என்றால் அது நாரதர்தான். பதஞ்சலிதான் ராஜயோக மார்க்கத்திற்கு குரு. அவர் யோக சூத்ரம் செய்துள்ளார். வேத வியாஸர்தான் ஞான மார்க்கத்திற்கு குரு. அவர் ப்ரும்மஸூத்ரம் செய்துள்ளார். அதுபோல் பக்தி மார்க்கத்திற்கு நாரதர்தான் வழிகாட்டி. நாரதரால் செய்யப்பட்ட நாரதபக்திஸூத்ரம்தான் பக்தி மார்க்கத்திற்கு வழிகாட்டி. இவ்வளவு பெருமைகளை உடைய நாரதரும் வியாஸரும் சேர்ந்து செய்த ஸ்ரீமத் பாகவதம், பக்தி வேதாந்தத்தினுடைய ஸாரமாக அமைந்துள்ளதில் ஆச்சர்யம் என்ன? ஸ்ரீமத் பாகவதத்தின் பிரயோஜனமே கைவல்யம் என்று ஸ்ரீமத் பாகவதமே கூறுகின்றது.

பாண்டு வம்சத்தில் வந்த பரிக்ஷித்திற்கு பிறக்கும் பொழுதும் ஒரு குருபுத்திரனால் உயிருக்கே ஆபத்து. முடிவிலும் அவனுக்கு ஒரு குருபுத்திரனால் உயிருக்கு ஆபத்து. துரோணருடைய புதல்வனான அஸ்வத்தாமா பிரம்மாஸ்த்ரம் விட்டு கருவில் இருந்த பரிக்ஷித்தையே அழிக்க பார்த்தான். பிரும்மாஸ்திரத்திற்கு பிரதி போட்டதாக எந்த புராணத்திலும் கிடையாது. ஆனால் பகவான் கிருஷ்ணனே பிரும்மாஸ்திரத்திற்கு பிரதி போட்டு பரிக்ஷித்தை காப்பாற்றினான். பரிக்ஷித்தினுடைய முடிவிலும் அவனுக்கு ஒரு குருபுத்திரனால் உயிருக்கு ஆபத்து. சமீகருடைய புத்ரன் ச்ருங்கி என்பவன் "இன்றிலிருந்து ஏழாவது நாள் தக்ஷகன் என்ற பாம்பு கடித்து சாவாயாக!" என்று சபித்துவிட்டான்.

பரிக்ஷித் பகவானிடம் தன்னை காப்பாற்ற சொல்லி கேட்கவும் இல்லை. கேட்டிருந்தாலும் பகவான் பரிக்ஷித்தை காப்பாற்றியும் இருக்கமாட்டார். ஏன் எனில் முதலில் வந்த ஆபத்து ஆயுதத்தினால்; முடிவில் வந்த ஆபத்து சாபத்தினால். அதுவும் தபஸ்வியான ரிஷி குமாரனால்; பரிக்ஷித் வேண்டுமென்றே புத்தி தடுமாறி ரிஷியிடம் தவறு இழைத்துவிட்டான். ஸாதுக்களுக்கு தவறு இழைத்தால் பகவானே கைவிட்டுவிடுவான் என்று பரிக்ஷித்திற்கே தெரியும். அதனால்தான் அவன் பகவானை பிரார்த்திக்கவில்லை. சுவற்றில் எறியப்பட்ட பந்து எப்படி அடித்தவனிடமே மீண்டும் வருமோ, அதுபோல ஸாதுக்களுக்கு இழைத்த தீங்கு அதே வேகத்துடன் அடித்தவனை வந்து தாக்கும்.

ஏழுநாட்கள் பாகவதத்தை பரிக்ஷித் கேட்டான் என்று சொல்லப்படுகின்றது. அதனால்தான் ஸ்ரீமத் பாகவதத்தை ஸப்தாஹமாக (ஏழு நாட்களாக) படிப்பது வழக்கத்தில் உள்ளது. இதன் தத்துவார்த்தம் என்ன? ஒரு ஜீவனுக்கு மரணம் ஏற்பட்டால் அது ஞாயிறு முதல் சனிவரை உள்ள ஏழு நாட்களில் ஒரு நாளில்தான் ஏற்படவேண்டும். அது பாகவதம் படித்த அல்லது கேட்ட நாளாக இருக்கவேண்டும் என்பதே அதன் பொருள். பாம்பு கடிக்கும் என்றாலும் கூட அதன் தத்துவம் என்னவென்றால் ஸம்ஸாரம் என்ற பாம்புதானே தவிர வேறு ஒன்றுமில்லை.

ஆதிசங்கரர் போன்ற எண்ணற்ற மஹான்கள் பல தெய்வ விஷயமாக செய்த ஸ்தோத்திரங்களை ஒரு புத்தகமாக போடுவார்கள். அதை ஸ்தோத்திரமாலா என்று சொல்லலாம். ஸ்ரீமத் பாகவதமும் ஒரு ஸ்தோத்திரமாலாவே தவிர வேறு இல்லை.

இதில், எல்லோரும் பல்வேறு தெய்வங்களை ஸ்துதி செய்யாமல் ஒரே தெய்வமான ஸ்ரீஹரியையே ஸ்துதி செய்கின்றனர். ஆபத்திலிருந்து காக்க வேண்டி உத்திரகுமாரி செய்த ஸ்துதி உள்ளது. பந்த பாசங்களுக்கு உட்பட்ட குந்தி செய்த ஸ்துதி இதில் உள்ளது. யோகீஸ்வரரான பீஷ்மர் செய்த ஸ்துதி உள்ளது. பக்தி யோகத்தை தவத்துடன் கூடி செய்த துருவனுடைய ஸ்துதி உள்ளது. ப்ராண சங்கடத்தில் அகப்பட்டு கொண்ட கஜேந்திரன் செய்த ஸ்துதி உள்ளது. இப்படி சொல்லி கொண்டே போகலாம். ஆகவே, ஸ்ரீமத்பாகவதம் ஒரு ஸ்தோத்திரமாலா என்றாலும் மிகையாகாது.

ஸ்ரீமத் பாகவதத்திலும் ஒரு கீதை வருகின்றது. மஹாபாரதத்தில் உள்ள கீதை கம்பீரமானது. ஸ்ரீமத்பாகவதத்தில் உள்ள கீதை ரஸரூபமானது; லலிதமானது. ஸ்ரீமத் பாகவதத்தின் ஏகாதஸ ஸ்கந்தம் (11வது ஸ்கந்தம்) தான் ஸ்ரீமத் பாகவத கீதை.

அர்ஜுனன் கம்பீரமான ஹிருதயம் உடைய க்ஷத்ரியன் அவனுக்கு பிரேமை, லலிதம், இவைகளுடன் கூடிய பக்தி புரியாது. புரியாதது மட்டுமல்ல, அவனுக்கு வரவும் வராது. ஓரிடத்தில் கூட பகவான் கோபிகைகளை பற்றி அர்ஜுனனிடம் மூச்சு விட்டிருக்கமாட்டான். ஏனென்றால் அவன் அதற்கு அதிகாரி அல்ல என்பதே காரணம். ஆனால் உத்தவனோ லலிதமான பக்தன். அவனிடம்தான் பகவான் தன்னுடைய ஹிருதயத்தை திறந்து கோபிகைகளின் பிரேமையை பற்றி பேசுகின்றான்.

வால்மீகி ராமாயணத்தை கம்பர் தமிழில் எழுதினார். மஹாபாரதத்தை வில்லிபுத்தூரார் தமிழில் எழுதினார். தமிழில், ஸ்ரீமத் பாகவதத்தை செவ்வை சூடுவார் எழுதியுள்ளார். ஆனால், ஏனோ அது அவ்வளவு பிரஸித்தமாகவில்லை.

இருந்தாலும், இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தில் ஸ்ரீமத் பாகவதத்தின் தாக்கம் காணப்படுகின்றது. கண்ணன் பாரதியிடம் கண்ணம்மா ஆனதுபோல், சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளிடம் கண்ணகி ஆகியது. கோபாலன் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளிடம் கோவலன் ஆகியது. ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள முக்கியமான ஒரு விழா கோவிந்த பட்டாபிஷேகம், சிலப்பதிகாரத்தில் பேசப்படுகின்றது. சிலம்பை விற்க சென்ற கோவலன் இரவு திரும்பாத பொழுது கண்ணகியை வைத்துக்கொண்டு அவர்கள் குறவையர் கூத்து என்று கோவலனுடைய அருமை பெருமைகளை ஆடிப்பாடுவதாக வருகின்றது. சிலப்பதிகாரத்தையும் ஸ்ரீமத் பாகவதத்தையும் படித்தவர்களுக்கு இது புரியும்.

–கனியும்.

நாமே சில சமயம் பசியினால் உணவு உட்கொள்வோம். சில சமயங்களில் ருசியின் ஆசையினால் உணவு உட்கொள்வோம். பசியினால் உணவு உட்கொள்வது போன்றது வேதாந்தம். அதில் ஸாதனையில் அழகு இல்லை. வேதாந்தத்தில் பிறவி துயரத்தை களைவதுதான் முக்கியம். ருசியின் ஆசையினால் உணவு உட்கொள்வது போன்றது பக்தி. பக்தி ஸாதனையே அழகானது. ருசியில் ஆசைப்பட்டு கொண்டு சாப்பிட்டாலும் கூட பசியும் எப்படி போய்விடுமோ, அதுபோல் பக்தியில் உள்ள ஆசையினால் பக்தி செய்தாலும் கூட தானே முக்தி கிடைத்து விடும்.

ஸ்ரீஸ்வாமிஜி

# பாலகர்களுக்கு ஒரு கதை



– ஸ்ரீஸ்வாமிஜி

கணவன் மனைவி ஒற்றுமையாக இருந்தால்தான் இல்லறம் இனிக்கும். அந்த தம்பதிகளுக்கு பிறக்கின்ற குழந்தைகள் தங்களுக்குள் ஒற்றுமையாக இருந்தாலும், அம்மா அப்பாவுடனும் ஒற்றுமையாக இருந்தால்தான் குடும்பம் இனிக்கும். ஒற்றுமையில்லாத குடும்பம் ஓயாத துயரத்தில் ஆழும். நண்பர்களுக்குள் ஒற்றுமை இருந்தால்தான் நட்பு பலனளிக்கும். வியாபாரத்தில் ஒற்றுமை இருந்தால்தான் வியாபாரம் செழிக்கும். ஸங்கத்திற்குள் ஒற்றுமை இருந்தால்தான் ஸங்கம் வளரும். ஊரில் ஒற்றுமை இருந்தால்தான் ஊர் வளரும். நாட்டில் ஒற்றுமை இருந்தால்தான் நாடு நன்மைபெறும். ஒற்றுமை இருந்தால் எல்லாம் உண்டு. ஒற்றுமை இல்லாவிடில் எதுவும் இல்லை. இந்த ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தி மஹாபாரதத்தில் ஒரு கதை உண்டு.

ஒரு வேடன் பறவைகளை பிடிப்பதற்காக காட்டில் வலைவிரித்தான். அதில் முதலில் ஒரு பறவை வந்து சிக்கியது. பிறகு மேலும் ஒரு பறவை வந்து சிக்கியது. சிறிது நேரத்தில், மேலும் பறவைகள் வரும் என்ற ஆசையில் பொறுமையாக காத்திருந்த பொழுது அவன் எதிர்பாராதது ஒன்று நிகழ்ந்தது. அந்த பறவைகள் இரண்டும் வலையை தூக்கி கொண்டு பறந்தன.

வேடன் பார்த்தான்; சிக்கிய பறவைகள் போனது மட்டுமல்லாமல் வலையும் போயிற்றே என்று கவலைப்பட்டான். ஆனால் அதே சமயம் அந்த வலையை தூக்கி கொண்டு பறக்கும் பறவைகளை பின் தொடர்ந்து ஓடினான். அவனை பார்த்தவர்கள் எல்லோரும் சிரித்தார்கள். பறவைகளோ "உன்னுடைய வலையை தூக்கிகொண்டு பறக்கின்றன. அதற்கு ஈடாக உன்னால் ஓட முடியுமா என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த வேடன் "இப்பொழுது அந்த இரண்டு பறவைகளும் ஒற்றுமையாக உள்ளதால் அவைகள் என்னை ஏமாற்றிவிட்டு சென்றுவிட்டன. ஆனால் யாருடைய ஒற்றுமையும் நீடிக்காது. அவைகளுக்குள் ஒற்றுமை குறையும். அப்பொழுது அவைகள் எனக்கு வசமாகும்" என்று கூறியபடியே ஓடினான்.

அவன் எதிர்பார்த்தது போலவே சற்று நேரத்தில் ஒரு பறவை இந்தபக்கம்தான் பறக்கவேண்டும் என்று கூறி அந்த பக்கமாக வலையை இழுத்தது. மற்றொரு பறவை "இல்லை! இல்லை! இந்தபக்கம்" என்று கூறி வலையை வேறு பக்கம் இழுத்தது. அவ்வளவுதான் இரு பறவைகளும் ஆளுக்கொரு பக்கமாக இழுக்க பொத்தென்று வலையுடன் பறவைகள் கீழே விழுந்தன. வேடன் அவைகளை பிடித்து கொண்டு சென்றுவிட்டான். எல்லோருடைய அறிவு, ஆற்றல், எண்ணம், சக்தி எல்லாம் இணையும் பொழுது அந்த பொருள் எல்லா விதத்திலும் தெய்வத்திற்கு சமமாகிவிடும்.

## தியானம்

– பிரசார வேன்

தியானம் செய்ய எல்லோருக்கும் ஆசை. தியானம், யோகம் போன்ற வார்த்தைகள் ஆன்மீக வாழ்க்கை வாழ ஆசைப்படுபவர்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமான வார்த்தைகள். இதில் என்ன ஆச்சர்யம் என்றால் தியானம் என்றால் என்ன? அதன் பலன் என்ன என்று தெரியாமலேயே பலருக்கு தியானம் செய்ய ஆசையுண்டு. தியானம் என்றவுடன் எல்லோரும் கண்களை மூடிகொண்டு அமர்ந்துவிடுவார்கள். சிலர் நேராக நிமர்ந்து அமர்வார்கள். சிலர் கூன் விழுந்த பாட்டியை போல் அமர்ந்து கொள்வார்கள். நிமர்ந்து உட்கார்ந்து கொள்பவர்களும், சிறிது நேரத்தில் கூன்போட ஆரம்பித்து விடுவார்கள். கொஞ்சம் கொஞ்சமாக தூங்க ஆரம்பித்து தலை கடிகார பெண்டுலம் போல் இந்த பக்கமும், அந்த பக்கமும் ஆடும்.

மனிதன், விலங்குகள் போன்ற எல்லோருக்குமே ஓட ஓட களைப்பு ஏற்படும். அதனால் வேகம் குறையும். ஓட ஓட வேகம் அதிகரிப்பது நீர்; அதாவது நதிகளுக்கு மட்டும்தான். அது போல் உடலிலேயே நினைப்பு ஒன்றினாலேயே வளர்வது மனம் ஒன்றுதான். வள்ளலார் போன்ற எண்ணற்ற மஹான்கள் இந்த மனதின் தன்மையை வியந்தும் அங்கலாய்த்தும் பாடியிருக்கின்றார்கள். அர்ஜுனனும், பகவத்கீதையில் "வாயு போன்ற இந்த மனதை அடக்கவே முடியவில்லையே க்ருஷ்ணா, என்ன செய்வேன்" என்று தவிக்கின்றான்.

ஒரு துணி தைக்கும் ஊசியின் வழியாக யானையை நுழைத்து அடுத்தபக்கம் கொண்டுவந்தாலும் வரலாமாம். மனதை அடக்குவது என்பது துர்லபமாம். பகவான் ரமணர் திருவண்ணாமலையில் இருந்து வந்த பொழுது எண்ணற்ற மஹான்கள் அவருடைய தரிசனத்திற்காக வருவார்கள். அப்பொழுது ஒருவர் பலமணிநேரங்கள் தன்னை மறந்து மரக்கட்டை போல் தியானத்தில் ஆழ்ந்திருப்பார். பொழுது விடிந்த உடன் சமாதியில் ஆழ்பவர், பொழுது அஸ்தமித்த பின்தான் சமாதி களைந்து எழுந்திருப்பார். அவரை பற்றி வியந்து பேசிய பேச்சு ரமணருடைய சந்நிதானத்தில் வருகின்றது. அப்பொழுது பகவான் ரமணர் "சமாதியில் செல்வதும் பல மணிநேரம் சமாதியில் ஆழ்ந்திருந்து பிறகு சமாதி களைவதும் உயர்ந்த நிலை அல்ல. சமாதி ஸஹஜமாக வேண்டும்" என்கின்றார். விஷயமோ இப்படியிருக்க, தியானம், யோகம், ஆத்மா, ஜீவன் முக்தி போன்ற சொற்கள் கத்திரிக்காய், கொத்தவரங்காய் போன்ற சொற்கள் போல், வாரி இறைக்கப்படுகின்றன. சரி விஷயத்திற்கு வருவோம். சரீரம் நம் வசத்தில் உள்ளது. உட்கார நினைத்தால் உட்கார்ந்து கொள்ளலாம்; நிற்க நினைத்தால் நிற்கலாம்; கைதட்ட நினைத்தால் கைதட்டலாம்; ஆனால் அந்த சரீரமே சில நிமிடங்களுக்கு மேல் ஒரு இடத்தில் உட்கார மாட்டாமல் எழுந்திருக்க அடம் பிடிக்கின்றது. சில நிமிடங்களுக்கு மேல் நிற்க மாட்டேன் என்று அடம் பிடிக்கின்றது. அப்படியிருக்க நம்முடைய வசத்தில் இல்லாத மனதை எப்படி ஒரே நிலையில் பல மணி நேரங்கள் நிறுத்துவது. இதில் வேறு காமம்,

பொறாமை, போட்டி, கோபம், உனக்கு வரவே கூடாது என்று பல ஆன்மீக நூல்கள் வலியுறுத்தும். எவ்வளவோ ஆன்மீக பெரியவர்கள் வருட கணக்காக பூஜை செய்கின்றனர். மூன்று வேளை நீராடுகின்றனர். ஸாத்வீகமான உணவையே குறைந்த அளவு உண்கின்றனர். எப்பொழுதும் தெய்வீகமான சூழ்நிலைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். அவர்களும் கூட, 'மற்றொரு ஸ்வாமிகளுக்கு நிறைய கூட்டம் வருகின்றது. அவர் புகழ் பரவுகின்றது' என்றால் Balanceஐ (நடுநிலை) சுத்தமாக இழந்து விடுகின்றார்கள் என்றால் சாதாரண மனிதன் என்ன செய்வான். இயற்கையான மனிதனுடைய குணங்களை அவன் பெரிதாக நினைத்து Depressionல் (மனஇறுக்கம்) மாட்டி கொள்வான்.

தியானத்தை வேகமாக ஓடி வந்து, பரபரப்பாக ஆரம்பிக்க கூடாது. முழுவதுமாக நம்மை Relax செய்து கொண்டு தியானம் பழக வேண்டும். தியானம் பழகும் பொழுது நேராக நிமிர்ந்து அமர்ந்து கொள்ள வேண்டும். முதுகுதண்டிலிருந்து தலையின் உச்சி வரை பிராணன் போவதற்கு வசதியாக அமர்ந்து கொள்ள வேண்டும். சுகாஸனம், பத்மாஸனம், சித்தாஸனம், வீராஸனம் என்று ஏதோ ஒரு ஆஸனத்தில் Comfortableஆக (சௌகரியமாக) அமர்ந்து கொள்ள வேண்டும். கீழே பலகை, கம்பளி, மான்தோல், தர்ப்பாஸனம் நல்லது. வடக்கு அல்லது கிழக்கு பார்த்து அமர்ந்து கொள்ளலாம். சரீரம் சுத்தமாக இருக்க வேண்டும். காற்றோட்டமும்,

சற்றே வெளிச்சமும் இருக்க வேண்டும். கொசு, ஈக்கள் போன்றவை இல்லாத இடமாக ஆரம்பத்தில் இருப்பது நல்லது. தியானத்தில் நாளைக்கே அல்லது மறுநாளே இறைவனை அடைந்து விடுவேன் என்று வீணான கற்பனைகளை விட்டு, தியானத்தில் "அ, ஆ" எழுத கற்று கொள்ளும் குழந்தையாக தன்னை நினைத்து ஆரம்பிக்க வேண்டும். கடிகாரத்தை பக்கத்தில் வைத்து கொள்ளவே கூடாது. அமர்ந்தவுடன் சிறிது நேரம் பேசாமல் இருக்கவும்; எந்தமுயற்சியும் வேண்டாம். சும்மா அமர்ந்து கொள்ளவும்.

பிறகு உங்களுடைய குருவை நினைத்து கொள்ளவும்; அவர் மேல் ஏதாவது ஸ்தோத்திரம் தெரிந்தால் மெதுவாக பரபரக்காமல் சொல்லவும். பிறகு அவரை மனதினாலேயே வலம் வந்து அவருடைய திருவடி தாமரைகளை தலையில் வைத்துக்கொண்டு "எனக்கு ஆழ்ந்த தியானம் ஸித்திக்க தாங்கள் அருள்புரிய வேண்டும்" என்று மனம் உருகி பிரார்த்தித்து கொள்ளவும். பிறகு எந்த தெய்வத்தின் மந்திரம் உங்களுக்கு உபதேசமாகி உள்ளதோ அந்த தெய்வத்தை முன்நிறுத்தி அவரை வணங்கி, உங்களுடைய மனதில் எத்தகைய பிரார்த்தனைகள் வருகின்றதோ, அவற்றை அவசரப்படாமல் பொறுமையாக தூய அன்புடன் விண்ணப்பிக்கவும். பிறகு ஒரு தாமரை இதழ் எப்படி மூடி கொள்ளுமோ அப்படி கண்களை மிருதுவாக, பொறுமையாக மூடி கொள்ளவும். மனது என்ற அந்த காட்டாற்று வெள்ளம் இப்பொழுது இந்திரியங்கள் மூலமாக தப்பிக்க நினைக்கும். கண்கள் மூலம் நல்ல காட்சிகளை,

வாய் மூலம் பேச்சு, நாக்கு மூலம் ருசி, உடல் மூலம் ஸ்பர்ஸம், மறைவிடங்கள் மூலம் அதனுடைய வேலை என்று ஆரம்பிக்கும். இவற்றிலும் பாதம், உச்சம் என்றெல்லாம் உண்டு. உதாரணமாக காது ஏதோ, ஒரு சப்தத்தை கேட்பதை விட, ஒரு நல்ல இசையை அதிக ஆர்வத்துடன் கேட்கும், அதை விட வம்பை இன்னும் அதிக ஆர்வத்துடன் கேட்கும், இப்படித்தான் ஒவ்வொரு உறுப்பும் தியானத்தில் அமர்ந்தவன் சற்றே தெய்வ வழிபாடு பழக்கம் உடையவராக இருந்தால் அவன் மனது அவனை பண்டரிபுரம், பிருந்தாவனம், பத்ரிநாத், காசி போகலாம் என்று எழுப்பிவிட்டு விடும். ராஜஸ ஸ்வபாவமுடையவரை "மழைவருகின்றதே" உணர்த்திய துணி நனைந்து விடுமே என்று ஏதோ ஒரு கார்யத்தை நினைவுறுத்தி எழுப்பி விட்டுவிடும். தாமஸ ஸ்வபாவமுடையவரை நாளை பார்த்து கொள்ளலாம், இப்பொழுது tiredஆக (சோர்வு) உள்ளது; இன்று தூங்கிவிடலாம் என்று எழுப்பி விட்டுவிடும். இவைகளில் எதற்கும் இடம் தரக்கூடாது.

சாதம் வடிக்கும் பொழுது, உலை கொதி வந்துவிட்டதா என்று பார்த்து பார்த்து, பிறகு அரிசி போடுவது போல், தெய்வீக பூஜை, கோவில், குளம் என்று சுற்றிவந்ததன் பலனாக மனம் தியானத்தில் ஈடுபடுகின்றதா என்பதை அடிக்கடி பரிக்ஷை செய்து பார்க்க வேண்டும். வெளியில் செய்யும் பூஜை, தீர்த்தயாத்திரை, க்ஷேத்ராடனம் எல்லாவற்றையும் விட மானஸீகமாக செய்வது தான் உயர்ந்தது. அதற்காக அத்தகைய நிலை ஸித்திக்காத பொழுதே ஸித்தித்து விட்டதாக நினைத்து ஏமாந்து விட கூடாது. கண், காது, மூக்கு, என்ற எல்லா இந்திரியங்களின்

செயலையும் இழுத்து ஆத்ம ஸ்தானத்தில் ஒடுக்க வேண்டும். இரண்டு கைகள், கால்களை வெட்டியும் மனிதன் உயிர்வாழ்வான். ஆகையால் அவைகளிடத்தில் உயிர் ஓட்டம் உண்டே தவிர ஆத்ம சைதன்யத்தின் இடம் இல்லை. மார்பு பாகத்தில் உள்ள இருமுலைகளுக்கு நடுவே ஒரு நேர் கோடு கிழித்தால் வலது முலைக்கு சற்றே சமீபத்தில் ஆத்ம சைதன்ய ஸ்தானம் உள்ளது. ஜபமோ, தியானமோ, அந்த இடத்தை குறித்துதான் செய்ய வேண்டும்.

ஜபம் செய்யும் பொழுது, T.V. Scrolling–ல் எழுத்துக்கள் வந்து கொண்டிருப்பதை பார்த்திருப்பீர்கள் அல்லவா. அது போல் தாங்கள் ஜபம் செய்யும் மந்திரத்தின் எழுத்துகள் உங்கள் மனதின் முன்பாக தொடர்ந்து வந்து கொண்டே இருக்க வேண்டும். ஒரு மூர்த்தியாக தியானம் செய்தால் அந்த மூர்த்தி உங்களை பார்த்து கொண்டிருப்பது போல் தியானம் செய்ய வேண்டும். மந்திரத்தையும், மூர்த்தியையும், எக்காலம் கொண்டும், எதற்காகவும், யாருடைய உபதேசத்தை கேட்டும் மாற்றவே கூடாது. மூன்று மாதங்களில் உங்களால் ஒரு இருபது நிமிடம் சேர்ந்தார் போல் உட்கார முடிந்தாலே, அதுவே பெரிய முன்னேற்றம்தான். தியானத்திலிருந்து பட்டென்று எழுந்திருக்காமல் கொஞ்சம் கொஞ்சமாக Relax செய்து கொண்டு மெதுவாக எழுந்திருந்து, மெல்ல மெல்ல செயலில் ஈடுபட வேண்டும். உணவு கட்டுப்பாடு, சுத்தம், தனிமை, மௌனம், இயற்கையான சூழ்நிலை, மஹான்களுடைய ஸந்நிதானம் இவையெல்லாம் தியானம் நன்றாக கைகூடுவதற்கு உதவுபவை ஆகும்.


## செய்திகள்

(ஸ்ரீ ஸ்வாமிஜியுடன்....)

ஜூலை 12லிருந்து 12ம் தேதி வரை, திருவண்ணாமலை சென்று, பகவான் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம 'குரு நாம வேள்வியில்' பங்குகொண்டார். 11ம் தேதி அங்கு பகவான் யோகிராம்சுரத்குமாரின் புதிய உருவ சிலையை திறந்து வைத்தார். 11ம் தேதி மாலை திருமதி. திலகவதி ராஜசேகர் எழுதிய "திருவிளையாடற் புராண" நூலையும் வெளியிட்டார். அன்றைய தினம் பகவான் யோகிராம்சுரத்குமாரின் ஆன்மிக வாரிசு ஜஸ்டிஸ் திரு.அருணாசலம் அவர்களின் பிறந்த தினம் என்பதால் ஏற்பாடாகியிருந்த விழாவிலும் கலந்து கொண்டார். 14 ஆஷாட ஏகாதசி அன்று மதுரபுரி ஆஸ்ரமத்தில் பூஜை முடித்தவர், கல்பாக்கம் அருகிலுள்ள விட்டலாபுரம் சென்று அங்கு நடைபெற்ற பூஜையிலும் பங்குகொண்டார். 17ம் தேதி பெங்களூர் ராமமூர்த்தி நகர் ஆஞ்சநேயர் கோவிலுக்கு சென்றார். 18ம் தேதி குரு பூர்ணிமா. பலர் ஆஞ்சநேயர் கோவிலுக்கு வந்திருந்தனர். பூஜைக்கு பின் பேசியவர் "உலகெங்கும் நாம ஒலி கேட்கும் வரை தான் ஓயப்போவதில்லை" என்று பேசினார். 18 அன்றே சென்னை திரும்பி மாலை ப்ரேமிக பவனத்தில் தரிசனம் தந்தார்.

20ம் தேதி முக்கடல் சங்கமிக்கும் குமரி கரையில் ஆஞ்சநேயரின் 28 அடி உயர சிலை (28/9 அன்று சிலை திறப்பு ஆக உள்ளது) தயாரிப்பு ஏற்பாடுகளை பார்க்க சென்றார். 21ம் தேதி அம்பாசமுத்திரம் சென்றார். அங்கு கிருஷ்ணன் கோவிலில் உபன்யாசமும், தரிசனமும் இருந்தது. 22 அன்று மாலை தூத்துக்குடி க்ருஷ்ணன் கோவிலில் உபன்யாசம் செய்தார்; நயினார் குளத்தில் நாம கீர்த்தனத்தில் பங்குகொண்டார். 23ம் தேதி மதுரை நாமத்வாரில் ஸத்ஸங்கம் நிகழ்த்தினார். 25ம் தேதி சென்னையில் நங்கநல்லூர் பஜன் மேளாவில் கலந்து கொண்டார். 28 ஏகாதசி அன்று ஆஸ்ரமத்தில் பூஜை செய்து பிரசாதம் வழங்கினார்.

## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



ஸ்ரீராமக்ருஷ்ணதாஸ் பாபாவின் வாழ்க்கை முறையே அவர் தேஹாபிமானத்தை கடந்தவர் என்பதற்கு அத்தாட்சியாகும். அவரது குடில் மிகவும் சிறியது. அதில் ஒருவரால் கால்களை நீட்டி கூட படுக்க முடியாது. மேலும், அது மிகவும் தாழ்ந்த பகுதியில் இருந்ததால் மழைகாலத்தின் போது வீடு முழுவதும் வெள்ளம் வந்துவிடும். கொசுக்களின் தொல்லையும் மிகவும் அதிகமாக இருக்கும். இவ்வளவு இன்னல்கள் இருந்த போதிலும் பாபா இவற்றைப் பற்றி சற்றும் கவலைப்படவில்லை இச்சூழ்நிலைகள் பாபாவை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. கிராமத்து மக்கள் அவரை வேறு இடத்திற்கு குடிபெயருமாறு பிரார்த்தித்தார்கள். ஆனால் அவர் வேண்டாமென்று இருந்துவிட்டார். (யாரும் அவரை காண வர இயலாத) இச்சூழ்நிலைகளே தனது பஜனைக்கு மிகவும் அனுகூலமாக இருப்பதாகவும் அவர் எண்ணினார்.

பல வருடங்கள் சென்ற பின் பாபா தனது பார்வையை இழந்தார். ஆனால், இதனால் பாபா சிறிதும் வருத்தமடையவில்லை. ஏனென்றால், அவரது அகக்கண்கள் திறந்து விட்டன. ராதையும் க்ருஷ்ணரும் அவருடன் பேச ஆரம்பித்துவிட்டார்கள்!

அகக்கண்கள் திறந்தவர்களுக்கு இந்த துக்கமயமான உலகத்தை காணும் புறக்கண்களால்தான் என்ன பயன்?

எப்பொழுதும் ஸ்ரீராதாக்ருஷ்ண யுகளத்தின் திவ்ய லீலைகளிலேயே மூழ்கியிருந்தார் பாபாஜி.

இந்நாள் வரை பாபா ஒருவரையும் தனது சீடனாக ஏற்கவில்லை. ஆனால் பார்வையை இழந்த பிறகு ப்ராணகௌராங்க தாஸ், மதனமோஹன தாஸ் என்ற இரண்டு சீடர்களை பாபா ஏற்றுக்கொண்டார். இவர்களில் ஒருவர் எப்பொழுதும் பாபாவினுடனே குடிலில் வஸித்து அவருக்கு கைங்கர்யம் செய்தார்.

பாபா தனது இரு சீடர்களிடமுமே யாரிடமிருந்தும் பணம் பெற்றுக்கொள்ள கூடாது என்று எச்சரித்திருந்தார். தானும் பணத்தை தொட மாட்டார், தனது சிஷ்யர்களையும் தொடவிட மாட்டார். தனது கிரிதாரிக்கும் தனது உடலுக்கும் கூட ஏதாவது வேண்டுமானாலும் அவர் வ்ரஜவாஸிகளிடமிருந்தே அதை பெறுவார். வ்ரஜத்தில் அல்லாது வேறு எங்காவது வாங்கப்பட்ட பொருட்களையோ, வ்ரஜவாஸிகள் அல்லாது வேறு யாராவது செய்யும் உதவியையோ அவர் ஏற்கவே மாட்டார். அவருக்கு தெரியாமல் இக்காரியங்களை செய்ய முற்பட்டோருக்கும் தோல்வியே ஏற்படும்.

ஒருமுறை அவருடைய உடல்நிலை சற்று மோசமாகி விட்டது. அப்பொழுது அவரை ப்ருந்தாவனத்திலுள்ள அவரது குரு ஆஸ்ரமத்திற்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள். ஒரு வ்ரஜவாஸி அவரது மிகவும் மோசமான உடலை கண்டு, தினமும் சிறிதளவு பால் ஏற்கும் படி வற்புறுத்தினார்.

அன்புக்கு கட்டுப்பட்டு பாபாவும் அதற்கு ஒப்புக்கொண்டார். சில நாட்கள் கழித்து இந்த வ்ரஜவாஸியினுடைய ஒரு நண்பர் பாபாவை தரிசிக்க வந்தார். அவர் கல்கத்தாவைச் சேர்ந்தவர். பாபாவை கண்டதும் அவர் ஒரு பெரிய மஹான் என்பதை அவர் உணர்ந்தார். பாபாவிற்கு எவ்விதத்திலாவது கைங்கர்யம் செய்ய வேண்டும் என்ற பேரவா அவருக்கு எழுந்தது. ஆனால் அவர் நண்பரோ "இதோ பாருங்கள்! அவர் வ்ரஜவாஸிகள் அல்லாதவர்களிடமிருந்து எதுவும் ஏற்கமாட்டார். அவருக்கு தேவை மாதுகரியில் கிடைக்கும் உணவு பொருட்களே. பெரும் முயற்சிக்குப்பின் அவர் சிறிது அளவு பால் ஏற்க ஒப்புக்கொண்டுள்ளார்" என்றார். இதைக் கேட்டவுடன் அந்த கல்கத்தா நண்பர் அந்த பாலுக்கான செலவை தான் ஏற்பதாக கூறி மிகவும் கெஞ்சினார். இந்த வ்ரஜவாஸியும் அரைமனதோடு ஒப்புக்கொண்டார். அந்த கல்கத்தா நண்பர் பாலுக்காக பணம் தரும் முன்பே, பாபா தனது ஞானத்ருஷ்டியால் தனது பாலுக்கான பணம் வேறு யாரிடமிருந்தோ பெறப்படுகிறது என்பதை அறிந்து விட்டார். மறுநாள் தனது சீடரை அழைத்தார். "மதன! நாம் இனி இங்கு வஸிக்கமாட்டோம். என்னை மகோராவிற்கு உடனடியாக அழைத்துச் செல்" என்றார்.

மதனமோகன் "பாபா! இங்கு எல்லா விதமான சூழ்நிலைகளும் சரியாக உள்ளது. தங்கள் உடல் நிலை சரியான பின்பே நாம் இங்கிருந்து செல்லலாமே" என்றார்.

பாபா "இல்லை இல்லை! உனக்கு தெரியாது. இங்கு பர அபேக்ஷை (மற்றவர்களை சார்ந்தித்தல்) இருக்கிறது. அதனால் இங்கு என்னால் ஒரு கணம் கூட இருக்க முடியாது. உடனே சென்று ஒரு குதிரை வண்டியை அழைத்து வா என்றார். மதன் அப்பொழுதே ஒரு டோங்காவை அழைத்து வந்து பாபாவை மகேராவிற்கு அழைத்து சென்றார்.

1984 ஆம் ஆண்டு பாபா மீண்டும் நோய்வாய்பட்டார். ராலா எனும் இடத்திற்கு விஸ்வரூபதாஸ் பாபா என்ற அவருடைய ஒரு குரு–பாய் அவரை அழைத்துச் சென்று சிகிச்சை செய்தார். 'பஸந்த்–கீ–பகீசீ' எனும் ஒரு அறையில் பாபாவை இருக்க செய்து நன்கு கவனித்துக்கொண்டார். பாபாவிற்கு உடல்நிலைதான் சரியில்லை. அவரது உள்ளம் ஒரு ஆனந்த கடலில் அவரை அலைகழித்தது. இதனால் அவர் சில சமயம் அழுவார், சில வேளைகளில் சிரிப்பார். சில சமயங்களில் பித்து பிடித்தவர் போல் பெரியதாக கத்தி அழுவார். மிகவும் க்ஷீணமான அவரது உடம்பில் ஆனந்த மிகுதியை தாங்காமலே அவர் இவ்வாறு செய்தார். ஒரு நாள் இரவு ஒரு மணிக்கு "ஜய் நிதாய்! ஜய் நிதாய்!" என்று கூறி மயக்கமடைந்தார் பாபா. விஸ்வருப பாபா அவ்விடத்திற்கு ஓடி வந்தார். அவரது நிலையை கண்டு விஸ்வரூப பாபா சமாதியடைந்து விட்டதாகவே எண்ணினார். மணிகட்டை பிடித்து நாடி துடிப்பை உணர எண்ணினார் விஸ்வருபர். ஆனால் பாபாவினுடைய கையை தொட்ட மாத்திரத்தில் பாபாவினுடைய மிகவும் தீனமான குரல் கேட்டது. அதோடு அல்லாமல் மின்சாரம் பாய்ந்தது போல் மூன்று நான்கு அடிகள் தள்ளி தூக்கியெறியப்பட்டார் விஸ்வரூப பாபா. பாபாவிற்கு

நித்யானந்தரின் தரிசனம் ஏற்பட்டு அதனால் அவர் உடம்பில் அப்படி ஒரு பக்தி ஏறியிருந்ததோ என்னவோ!

மறுநாள் ஏகாதசி இரவு ஒரு மணிக்கு பாபா பஜனை செய்து கொண்டிருந்தார். அவர் தனது குருநாதரான ஸ்ரீராமதாஸ பாபாஜீயின், பரமகுருவான ஸ்ரீராதாரமண சரண தாஸ்தேவ மற்றும் அனேக மகான்கள் பகீசிக்குள் நுழைவதையும், ம்ருதங்க தாளங்களுடன் பஜனை செய்வதையும் கண்டார். அவர்கள் பாபாவிடம், "நாங்கள் ப்ருந்தாவனம் செல்கிறோம். நீயும் எங்களுடன் வா." இதை கூறி அவர்கள் எல்லோரும் மறைந்து விட்டார்கள். பாபா மூர்ச்சையடைந்தார்.

மே 13, 1984 த்ரயோதஸி அன்று மதியம் ஸ்ரீசிவசரண வார்ஷ்ணேய என்பவரை அழைத்து வரச் சொன்னார். அவர் வரும்போது பாபா ஜபம் செய்து கொண்டிருந்தார். பாபா கூறினார். "பாபாஜியும் (ஸ்ரீராமதாஸ் பாபா) பாணே பாபாவும் (ஸ்ரீ ராதாரமண சரண தாஸ தேவர்) என்னை ப்ருந்தாவனம் வரச் சொல்லியிருக்கிறார்கள். தயவு செய்து என்னை உடனே அங்கு அழைத்து செல்."வார்ஷ்ணேயர் "பாபா இப்பொழுது மிகவும் வெயில் ஆக உள்ளது. மாலை வேளையில் செல்லலாம்" என்றார்.

"இல்லை இல்லை இப்பொழுதே செல்ல வேண்டும். நேரத்தை வீணாக்காதே" என்றார் பாபா. வார்ஷ்ணேயர் ஒரு குதிரை வண்டியை அழைத்து வந்தார். மதனமோஹனர், வார்ஷ்ணேயருடன் பாபா அந்த டோங்காவில்

ஏறிக்கொண்டார். வார்ஷ்ணேயர் பாபா வண்டியில் ஏறுவதற்கு உதவி செய்ய அவரது கையை பிடித்த பொழுது, ஒரு மின்சாரம் தன்னுள் பாய்வதை உணர்ந்தார். ஏகாதசி அன்று ஏற்பட்ட தர்சனத்தின் காரணமாக தெய்வீக அலைகள் பாபாவின் உடலில் இன்னும் தேங்கியிருந்தன. மதியம் 2.30 மணிக்கு டோங்கா குரு ஆஸ்ரமத்தையடைந்தது. குரு ஆஸ்ரமத்தில் 30 வருடங்களாக அகண்ட ஹரி பஜனை நடந்து வந்தது.

"என்னை கீர்த்தனம் செய்யுமிடத்திற்கு அழைத்து செல்லுங்கள்" என்றார் பாபா. அங்கு சென்று அரை மணி நேரம் ஆழ்ந்த த்யானத்தில் அமர்ந்தார் பாபா. அரை மணி நேரம் கழிந்த பின் ந்ருஸிம்ஹ சதுர்தசி திதி பிறந்தது. அப்பொழுது 'ஜய் ராதே! ஜய் நிதாய்!' என்று உறக்க கத்தியவாறே தனது தேஹத்தை விட்டு தனது குருதேவரையும், பரமகுருவையும் சந்திக்க நித்ய ப்ருந்தாவனத்திற்கு சென்றார் பாபா. ராதாக்ருஷ்ண திவ்ய யுகளத்தின் லீலைகளில் பங்கேற்க நித்ய ப்ருந்தாவனத்தை அடைந்தார் பாபா.

சில சமயங்களில் வாழ்க்கையில் ஒரு அலுப்பு ஏற்படும். அப்பொழுதெல்லாம் மனிதப் பிறவியை நமக்கு இறைவன் அருளியதால் அல்லவா, நம்மால் இப்படி அலுத்துக்கொள்ளவாவது முடிகின்றது. பறவையாகவோ, பூச்சி, புழு, விலங்குகளாகவோ பிறந்திருந்தால் அலுத்து கொள்ள கூட முடியாதே என்பதை உணர்ந்து நாம கீர்த்தனம் செய்ய வேண்டும்.

ஸ்ரீஸ்வாமிஜி

## மாலே மணிவண்ணா – 65

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

"சாணிலும் உளன்; ஓர் தன்மை, அணுவினைச் சதகூறிட்ட
கோணினும் உளன்; மாமேருக்குன்றினும் உளன்; இந்நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன சொல்லினும் உளன்" (கம்ப 6312)

என்ற சிறுவன் பிரஹ்லாதனின் வார்த்தையைக் கேட்டுக் கொண்டு அங்கேயே அவர்களோடேயே நானும் இருந்து கொண்டிருக்கிறேன். அதற்குப்பிறகுதான் சிறுவன் எனக்குப்பெரிய சங்கடத்தை ஏற்படுத்தி விட்டான். விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திலே எனக்கு முதல் திருநாமம் விஸ்வம் என்பது. 'விஸ்வம்' என்றால் எல்லாம் என்பது பொருள். 'அனைத்தும் தாமாய் இருப்பவர்' என்று பொருள் சொல்வார்கள். 'எல்லாமாய் இருப்பவன் யான்' என்ற கருத்தில் எழுந்த திருநாமம் 'விஸ்வம்' என்றால் அதற்கு அடுத்த திருநாமம் 'விஷ்ணு' என்பதாகும். அதற்கு 'எங்கும் நிறைந்திருப்பவர்' என்று பொருள். உள்ளும் வெளியுமாகி நிறைந்திருப்பவர் என்றால் இந்த இரண்டு திருநாமங்களாலும் உலகமாய் இருப்பவனும் உலகினுள் இருப்பவனும் நானே ஆகிறபோது பிரஹ்லாதன் சொல்கிற வார்த்தையை நிறைவேற்றத்தடையேது? ஆனாலும் பிரஹ்லாதன் இரணியனிடம் "இத்தன்மை காணுதி விரைவின்" என்று கூறிவிட்டான். அத்தோடு நிறுத்தாமல், "தொட்ட தொட்ட இடம்தொறும் தோன்றான் ஆயின் என் உயிர் யானே மாய்ப்பன்" (கம்ப **6314**)என்று கூறவே எனக்கு திடுக்கென்றது. இரணியன் எந்த இடத்தில் என்னைத் தேடுவானோ? தயாராக நான் இருக்க வேண்டுமே?

நீளத்தில் நீளமாக வட்டத்தில் வட்டமாக, சதுரத்தின் சதுரமாக சிறியதில் சிறியதாக, பெரியதில் பெரியதாக இப்படி அந்த அந்தப்பொருளிலும் அதனதன் அளவில் சர்வ வியாபியாக இரணியன் தொட்டவுடன் தோன்றும்படி ஒரு கணத்தில் ஒளித்து நிற்க நான்பட்ட சிரமம் சொல்லில் அடங்காது என்றார் பெருமான். மேலும் என்னுடைய நல்லகாலம் அவன் தூணைத் தட்டினான். அவனே அளந்து வைத்த தூணாம் அது. ஆழ்வார் அதை அறிந்து சொன்னார். மாளிகையைக் கட்டும் பொழுது இரணியன் அவனே பக்கத்திலிருந்து அளந்து வைத்து தூணை நிறுத்தியிருக்கிறான். அந்தத் தூணில் நிச்சயமாக நான் இருக்க மாட்டேன் என்று அந்தத் தூணைத்தட்டினான். வில்வமாகவும் விஷ்ணுவாகவும் உள்ள எனக்கு இது ஒரு விளையாட்டு என்று அவனுக்குத் தெரியாது.

"அளந்திட்ட தூணை அவன் தட்ட அங்கே
வளர்ந்திட்ட வானாகிர்ச் சிங்க உருவாய்
உளந்தொட்டு இரணியன் ஏண்மார் வகலம்
பிளந்திட்ட கைகளால்" (பெரி.திரு. 7:9)

சப்பாணி கொட்டப் பெரியாழ்வார் என்னைப் பணித்த போதுதான் இரணியனே அளந்து வைத்த தூணிலிருந்து நான் வெளிப்பட்டிருக்கிறேன் என்பது எனக்குத் தெரிய வந்தது என்று சொல்லிப் பெருமான் நிறுத்தினார். தன்பால் உள்ளார்ந்த அன்பு கொண்டு திருநாமத்தை உச்சரிக்கும் சிறுவனுக்காக பகவான் பட்ட சிரமம் கேட்டு நெஞ்சு நெகிழ்ந்தாள் பிராட்டி. (தொடரும்)

**அக்ஷரமணமாலை**

ஸ்ரீ ஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து – 149

நொந்திடாது உந்தனை தந்தெனை கொண்டிலை
அந்தகன் நீயெனக்கருணாசலா

'நொந்திடாது' என்றால் இங்கு 'சிரமப்படாது' என்று அர்த்தம். மிகவும் சிரமப்படாது ரமண மஹரிஷிகள் பகவானை அடைந்து விட்டார். பல வருடங்கள் கடுமையாக தவம் புரிந்தாலும் ஆன்மானுபவம் பற்றி சிறிதும் தெளிவுறாமலேதான் சாதகர்கள் சாதனை புரிகின்றனர். புராணங்களை பார்த்தால் ஆயிரக்கணக்கான வருடங்கள் தவம் புரிந்தாலும், முனிவர்கள் பூரண நிலையை அடையாது உள்ளனர் என்பது தெரிகிறது. ஆயின், ரமண மஹரிஷிகளை சிறிதும் சிரமப்படுத்தாது, ஆன்மானுபவத்தை, தன்னையே அருணாசலேஸ்வரன் கொடுத்தான் என குறிக்கிறது.

இங்கே ஒரு பொருள் பரிமாற்றம், வர்த்தகம் நடந்ததாக ரமண மஹரிஷிகள் குறிப்பிடுகிறார். "உந்தனை தந்து எனை" அதாவது அருணாசலேஸ்வரன் தன்னையே தந்து, ரமண மஹரிஷிகளை அதற்கு பிரதியாக எடுத்துக்கொண்டுவிட்டான் என்று பொருள்படுகிறது. சர்வசக்தனான இறைவன் தன்னையே தந்ததால், அதற்கு இணை தான் இல்லை என கூறுகிறார். 'தந்தெனை கொண்டிலை அந்தகன்' – இப்படி வர்த்தகம் செய்யும்பொழுது, ஒப்பில்லாத தன்னையே இழந்ததால், 'அந்தகன்' –குருடன் என்று பொருள்படும்படி வருகிறது.

அந்தகன் என்றால் குருடன் என்றும் அர்த்தம். எமன் என்றும் அர்த்தம். தன்னை கொடுத்துவிட்டு, தனக்கு சமமான ஒன்றை பெறவில்லை என்பதால், இறைவன் கண்ணில்லாதது போல் நடந்து கொண்டு விட்டார். உத்தம பக்தர்களிடம் இப்படி நடந்து கொள்கிறான் என்பது கண்கூடு. இதே போல், மாணிக்கவாசகரும் பாடி உள்ளார்.

'அந்தகன் நீ' – நீ எனக்கு எமன் என்றால் எப்படி? எமனின் தொழில் உயிரை எடுப்பது. உயிர் பிரிந்தாலும், தூல சரீரம்தான் அழிகிறது. சூக்கும உடல் பல உலகங்களில் சஞ்சரித்து விட்டு மறுபடி பிறக்கிறது. அழிவது உடல்தான், ஜீவனல்ல. ஆதலால், உடலை அழிப்பது மரணம் என்று சொல்ல முடியாது. ஜீவன் அழிந்தால்தான் மரணம் என்று சொல்ல முடியும்.

அருணாசலேஸ்வரனுடன் தான் இரண்டற கலந்ததால், தனது ஜீவபேதம் அழிந்து விட்டது. அதனால், "எனக்கு அருணாசலேஸ்வரா, நீ எமன் போல" என்று அழகாக குறிப்பிடுகிறார்.

ஆழ்ந்த அர்த்தம் கொண்டதாக உள்ள இப்பாடல் போன்றே "லாபநீ இகபரலாபமில் எனைக்கொண்டு லாபமென்னுற்றனை" என்று பின்னர் வரும் ஒரு பாடலிலும், அருணாசலேஸ்வரன் தன்னையே தந்து தனக்கு சமானமில்லாத என்னைப் பெற்றுக்கொண்டான் என்கிறார் பகவான் ரமண மஹரிஷிகள்.

# நமது ஸ்தாபனங்கள் ஆற்றும் சமுதாயப்பணிகள்

கடந்த இதழில் 'நமது ஸ்தாபனங்கள் ஆற்றும் சமுதாயப்பணிகள்' கீழ் வந்த சில செய்திகளின் விரிவாக்கம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. இதை கருத்தில் கொள்க.

- மாஹாரண்யம் கிராமத்தில் அமைந்துள்ள துவக்கப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழகம் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள ஒரு ஆசிரியருக்கும் மற்றும் நடுநிலை பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகம் சார்பாக இரண்டு ஆசிரியர்களுக்கும் உதவித் தொகை மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

- மாஹாரண்யம் கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்பில் அமைந்துள்ள சிறுவர் பள்ளியில் பாலகர்களுக்கான சுவர் சித்திரங்கள் வரைந்து கொடுக்கப்பட்டுள்ளது.

- வெள்ளரை கிராமத்தில் உள்ள துவக்கப்பள்ளி மாணவர்களுக்கு சீருடை கடந்த இரண்டு வருடங்களாக வழங்கப்பட்டு வருகிறது.

- ஆஸ்ரமம் சுற்றியுள்ள எட்டு கிராம துவக்கப்பள்ளிகளுக்கு Education Kit வாங்குவதற்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

- மாஹாரண்யம் கிராமத்தில் அமைந்துள்ள நடுநிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளியாக உயர்வதற்கு உண்டான வைப்புத்தொகை வழங்கப்பட்டது.

- "ப்ரேமிக வரதன் இலவச மருத்துவ முகாம்" ப்ரதி ஞாயிற்றுகிழமை ஆஸ்ரமத்திற்கு அருகில் இயங்கி வருகிறது. ஸ்ரீஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக்கூடம் மூலம் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த சுமார் 100 பேருக்கு தினமும் அன்னதானம் செய்யப்படுகிறது.

***New Cassette Releases From*** **AMUTHAM MUSIC**

1.பஞ்சகீதங்கள்
2.கலிகாலஉசிதம் தர்மம்- மஹாமந்திர கீர்த்தனம்
3.மஹாமந்திர கீர்த்தனம்- foreword in Tamil & English by
Sri.Dr.A.Bhakyanathan & Keerthan in Divine voice of Sri Swamiji

Produced and Marketed by:
AMUTHAM MUSIC PRIVATE LIMITED
4/10, Bhaskarapuram, Mylapore, Chennai - 4
Email:amuthammusic@gmail.com
www.amuthammusic.com ph:24662244,42169202



## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| தேதி/நேரம் | நிகழ்ச்சி |
|---|---|
| செப்டம்பர் 11 ,25 | ஏகாதசி – மதுராபுரி ஆஸ்ரமம் |
| செப்டம்பர் 11 | திருநாங்கூர் வண்புருடோத்தமன் ஆலய கும்பாபிஷேகம் |
| செப்டம்பர் 12 | ப்ரேமிக வித்யாகேந்திரா திறப்பு விழா Gurgaon (Near New Delhi) |
| செப்டம்பர் 28 | கன்யாகுமரி ஆஞ்சநேயர் சிலை திறப்பு |

New Releases from:
Chaitanya Mahaprabhu Namabhiksha Kendra
1. Answers and Beyond
2. Sri Krishna Jayanthi Utsav 2007 - DVD






ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : 044-2489 5875, Email : contact@madhuramurali.org

என்னும் முகவரிக்கு அனுப்பவும்.